# மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம்

### பன்னிருசீர் விருத்தம்

உலகிற் பிறந்துநான் கண்டபயன் ஒன்றில்லை
    உற்றஇள வயது தாண்ட
  ஒருத்தியை மணந்தவுடன் அவளோடு தொடர்ந்தவைகள்
    ஒரு கோடி யாம் விசாரம்
சிலகணம் இருந்தகளி மறுகணம் கண்ணிலே
    தின்னவரு விவகாரமிச்
  சென்மமேன் மனைவியேன் உறவுசொல் தீமையேன்
    எனநைந்து வாடுநேரம்...
மலரனைய நயனமும் வளர்கின்ற சிறுமார்பும்
    மலையரசி தந்தபாலே
  வடிகின்ற குவிவாயும் எழிலாடு தளர்நடையும்
    வாய்ப்பஎன் அகமீதிலே.
கலகலென மயிலினொடு விளையாடி வருகோலம்
    காண்பனோ் கவலையுண்டா
  கன்னலென வயலெலாம் செந்நெல்வளர் மயிலம்வாழ்
    கந்தா குழந்தைவேலா!

வரிசைமா மணிவீடு மண்டுசெந் நெற்குவியல்
    வளம்வேண்டி வேண்டிஎன்கை
  வைத்ததலை வைத்தபடி வசையிட்டு நின்னைநான்
    வாய்சோர ஏசுநேரம்
பரிசுற்ற வறியர்போல் கார்த்திகைப் பெண்களென
    பால குமாரவென்று
  பளிங்குகன் னஞ்சேர முத்திடுவர் அவணீங்கிப்
    பாய்புனற் கங்கையன்னை
விரைவினில் அழைத்தனள் என்றோடி வருகையில்
    வெண்கங்கை தாவநீபோய்
  விமலையாம் அன்னையைக் கண்டிடப் போவதாய்
    விடைபெற்ற னகமீதிலே
கருமலை பொடித்தவடி வேல்தூக்கி வருகோலம்
    காணிலென் வறுமையுண்டோ
  கற்புடைய மாதர்சூழ் வெற்பணியு மயிலம்வாழ்
    கந்தா குழந்தைவேலா!

தன்னிலையில் இன்றிநல் வாதமும் பித்தமும்
    சிலேட்டுமமு முறைபிறழ்ந்த
  தன்மையாற் கண்குழிந் தெழில்மேனி தசைதிரைந்
    தெந்நேரமுங் கவன்று
தின்பன தவிர்ந்துதின் னாதன விழுங்கிமனை
    சேர்ந்தஅனை வருநோயினாற்
  செய்வதறி யாதுவரு வார்போவர் தம்மிடம்
    செப்பியுழல் கின்றநேரம்

அன்பிலுரை அருணகிரி யின்தமிழின் நவநீதம்
அள்ளிஅறு வாய்மலர்மேல்
அப்பிநற்கரிமுகன் தம்பிவா, என்னவும்
அம்மான் அணைக்க வரவும்,
கன்னலென என்றனக மீதுவால் காணில்தலை
காட்டுமோ பிணிகளென்பால்
கரிவண்டெ லாம்பண்கள் சொரிகின்ற மயிலம்வாழ்
கந்தா குழந்தைவேலா!

ஐம்பெரும் பூதங்கள் என்னையர சாளவும்
அவர் சொல்லில் நானாடவும்,
ஐங்குரவர் சொன்னெறிகள் திரணமாய் எண்ணியிங்
கல்லனபு ரிந்து நெஞ்சம்
வெம்புகடல் வாய்ப்படு துரும்பாய் அலைந்துபல
வெறுமனிதர் காணிலச்சம்
மேலாக, நாலாவி தத்திலுமிவ் வாபத்தில்
மீளநான் வாடுநேரம்,
சம்பிரம வாடகத் தம்பமிசை ஆரமாம்
சங்கிலியி சைத்ததொட்டில்
தாலாட்ட மலைவல்லி பாலூட்டெ னாஅவளும்
தன்தோளை நீட்டஅன்றே
கம்பிமயில் மீதுநீட் டினஎனதகம் வரல்காணில்
கனமையல் எனையண்டுமோ?
கான்குரவா கவணேறி வான்மோது மயிலம்வாழ்
கந்தா குழந்தைவேலா!

மனிதர்மனி தர்க்கடிமை ஆகுமொரு தீக்கனவு
மண்ணிடை யிருப்பதில்லா
வகைக்கெனது நாட்டினர் அறப்போர் நடந்திடுவர்
வாய்மையிற் பண்டைநாளில்;
எனினுமென தன்பான "நாடின்று மற்றோர்
இனத்தவர்க் கடிமையாதல்"
என்னுமிக் கோலத்தை எண்ணியென் தோள்பார்த்து
நான் பார்த் திருக்குநேரம்
கனியுதடு புன்னகை கொழிக்கமுக நிலவுதொறும்
கட்டவிழ்கு ழல்மொய்ப்பதைக்
கையால் விலக்கியே ஒய்யாரமாக நடை
காட்டியென் னகமீதிலே
கனல்மேனி இருள்கூடிய வருகோல மதுகாணக்
கடும்பகை இருப்பதுண்டோ?
கதியிதென உலகெலாம் வதியுமெழில் மயிலம்வாழ்
கந்தா குழந்தைவேலா!

## வாழி வெண்பா

வாழ்கமுரு கன்பாத மாமலர்கள்! வேல்மயில்நற்
கோழிஅறம் வான்உலகு கோதில்மறை—வாழியவே
எல்லா உயிரும் இனிதாக எங்கள்தமிழ்ச்
சொல்லமுதாய் ஓங்கபுகழ் சூழ்ந்து.

□ □ □